**முதன்மை மாவட்ட நீதிமன்றம், சிவகங்கை**

**OS.No.31/2024**

Date: 12.03.2026 PW.2 (மலையரசன்)

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்குவிசாரணை தொடர்ச்சி:**

தாவா புரோ நோட்டு எப்போது தயார் செய்யப்பட்டது என்றால் 28.12.2020 ம் தேதி தயார் செய்யப்பட்டது. புரோ நோட்டு தட்டச்சு செய்யப்பட்டதா என்றால் இல்லை எழுதப்பட்டது. இந்த வழக்கில் பிரதிவாதிகள் தான் புரோ நோட்டு எழுதினார்களா என்றால் இல்லை. சுப்ரமணியன் என்பவர் எழுதினார். ஒரே நிற மை பேனாவில் தான் புரோ நோட்டில் அனைவரும் கையொப்பம் இட்டார்களா என்றால் நான், ராமச்சந்திரன், மலையரசன், சுப்ரமணி ஆகியோர் ஒரே பேனாவில் கையொப்பம் போட்டோம். பிரதிவாதிகள் அவர்கள் பேனாவில் கையொப்பம் போட்டார்கள். இந்த புரோ நோட்டில் வாதி முதலில் கையெழுத்து போட்டாரா அல்லது கடைசியாக கையெழுத்து போட்டாரா என்றால் எனக்கு ஞாபகமில்லை. வாதி புரோ நோட்டில் கையெழுத்து போட்டாரா என்றால் எனக்கு ஞாபகமில்லை. புரோ நோட்டு எழுதிய தேதியில் வாதி பிரதிவாதிக்கு பணம் கொடுத்தாரா என்றால் இல்லை. இந்த வழக்கு சம்மந்தப்பட்ட விவரம் எனக்கு வாதி சொல்லிதான் தெரியும் என்றால் பிரதிவாதி தான் சொன்னார். புரோ நோட்டில் பிரதிவாதிகளை நம்பி நான் கையெழுத்து செய்தேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.1 கடவு சீட்டில் பிரதிவாதிகள் கையெழுத்து செய்யவில்லை என்றும் நான் வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை:** இல்லை

சாட்சி சொல்லியபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, திறந்த நீதிமன்றத்தில் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு கையொப்பமிடப்பட்டுள்ளது.

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.03.12 17:28:24 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
சிவகங்கை